DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

Case Number	:	C.C.No. 139/2024
Prosecution Witness	:	**அ.சா**.28
Name	:	**கற்பகம்**
Husband Name	:	மாரிமுத்து
Address	:	செட்டிக்குளம்
Age	:	53/2025

தேதி : 03.06.2025

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை தெரியும். எதிரி பக்கத்து வீட்டுக்காரர், ஒரே தெருவில் வசித்து வருகிறோம். எனக்கு ஏற்கெனவே லோன் வாங்கி கொடுத்த வகையில் எதிரி வசந்தியை எனக்கு தெரியும். எதிரி என்னிடம் அவருடைய மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்று கோயம்புத்தூரில் மருத்துவம் பார்த்து வருவதாகவும் அவரை பெரம்பலூருக்கு அழைத்துவந்து சிகிச்சை செய்ய பணம் தேவைப்படுவதாக என்னிடம் பணம் கேட்டார். லோன்வாங்கி கொடுத்தால் அதற்கான தவணை தொகைகளை அவரே கட்டிவிடுவதாக சொன்னார். அதனால் நான் துறையூரிலுள்ள பெனிஸ்டார் என்ற தனியார் நிறுவனத்தில் கடன் ரூ.50,000/-ஐ பெற்று நான் ரூ.25,000/- எடுத்துக்கொண்டு மீதி ரூ. 25,000/-ஐ வசந்தியிடம் ரொக்கமாக பணம் கொடுத்தேன். அவர் அந்த கடன் தொகையின் தவணைகளை கட்டிவிடுவதாக சொன்னதை நம்பி கடன் வாங்கிகொடுத்தேன். ஆனால் அவர் அதில் இரண்டு தவணைகள் மட்டும்

செலுத்தினார். மீதி தவணை செலுத்தவில்லை. அதனால் நிதி நிறுவனத்திலிருந்து எனக்கு போன் செய்து பணம் கட்ட சொன்னார்கள். நான் வசந்தி கட்டிவிடுவார் என்று சொன்னேன். ஆனால் அவர்கள் வசந்தி பணம் கட்டவில்லை என்று அவர் தலைமறைவாகிவிட்டார் என்று சொன்னார்கள். ஊரில் விசாரித்தபோது எதிரி வசந்தி நிறைய பேரிடம் கடன் வாங்கிகொண்டு பணம் கட்டாமல் தலைமறைவாகிவிட்டதாக சொன்னார்கள். சத்தியா என்பவர் பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலை புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள். வசந்திக்கு வாங்கிகொடுத்த கடனுக்கான தவணை தொகைகளை தற்போது நான்தான் கட்டி வருகிறேன்.

குறுக்கு விசாரணை

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரத்தைதான் போலீஸார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். போலீஸார் என்னை விசாரித்தபோது துறையூரில் உள்ள பெய்டர்ஸ் நிறுவனத்தில்தான் பணம் வாங்கி கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. வசந்தியின் மாமனாருக்கு உடல்நிலை மோசமாக இருப்பதால் என்னிடம் பணம் கேட்டார். கடன் ரூ.50,000/–ல் நான் பாதி பணமும், வசந்தி பாதி பணமும் எடுத்துக்கொண்டோம். நான் கொடுத்த கடனில் இரண்டு தவணை செலுத்திவிட்டார் என்றால் சரிதான். எந்த தேதியில் நான் கடன் வாங்கிகொடுத்தேன் என்று போலீஸார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் அது குறித்து போலீஸ் என்னிடம் கேட்கவில்லை. எதிரி எனக்கு பக்கத்து வீடு, பழக்கம் என்றால் சரிதான். எதிரி எனக்கு ஏற்கெனவே கடன் வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எதிரிக்கு ஏமாற்றவேண்டுமென்ற எண்ணம் இல்லை. எல்லோரும் சேர்ந்து அவரை முற்றுகையிட்டதால் அவரால் தவணைகளை சரிவர செலுத்தமுடியவில்லை என்றால் சரியல்ல. வசந்தி என்னிடம் வாங்கிய பணத்தை கட்ட முடியாது என்று சொல்லவில்லை என்றால்

சரிதான். எனக்கு சேர வேண்டிய பணத்தை எதிரி தந்துவிடுவார் என்றால் கொடுத்தால் வாங்கிகொள்ளுகிறேன்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.